

# இலங்கை - சர்வதேச நாணய நிதியக் கடன் வசதி:

## சவால்களும் வாய்ப்புக்களும்

### 1. அறிமுகம் - இலங்கை - சர்வதேச நாணய நிதிய உறவுகள் பற்றிய சுருக்கமான பின்னணி

சர்வதேச நாணய நிதியம் (IMF) என்பது தனது உறுப்பு நாடுகளின் பேரின பொருளாதார கொள்கைகளை அவதானித்து செலாவணி வீதம் சென்மதி நிலுவை (BOP) போன்றவற்றின் நகர்வுகளின் அடிப்படையில் உலக நிதிமுறைமையை கண்காணிக்கும் மிகவும் முக்கியமான சர்வதேச நிதி நிறுவனமாகும். சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நாடுகளுக்கு நிதி உதவி வழங்குவதே IMF இன் மிக முக்கிய பணியாகும்.

கடந்த காலங்களில் தனது அன்னிய செலாவணி பிரச்சினைகளை சமாளிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை சர்வதேச நாணய நிதிய உதவியினைப் பெற்றுள்ளது. 1970களின் பிற்பகுதியில் தாராளமயமாக்கல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தவணைக்கடன் வசதிகள் விரிவாக்கப்பட்டது முதல் சர்வதேச நாணய நிதியத்தினுடனான இலங்கையின் முறைசார் தொடர்புகள் தொடங்குகின்றன. இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக அவ்வாறான தவணைக்கடன் வசதிகளை 1977, 1979, 1980, 1981, 1982, 1983, 1988, 1989, 1991, 2001, 2003 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளில் பெற்றுக் கொண்டன. இலங்கை அரசாங்கம் அண்மையில் IMF இடமிருந்து பெற்றுக் கொண்ட கடன் பற்றிய சுருக்கமான விபரம் தற்போதைய கடன் வசதிக்கான ஒரு முன்னுரையாக கீழே தரப்படுகிறது.

### 2001 ஆம் ஆண்டின் மேலதிக ஏற்பாடு (SBA)

1.3 மாத கால இறக்குமதிகளுக்குப் போதுமான அளவிற்கு மொத்த அன்னியச் செலாவணி ஒதுக்கீடு 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்திருந்த வேளையில் மேற்படி ஏற்பாட்டின் கீழ் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அன்னியச் செலாவணி ஒதுக்கீட்டைக் கட்டியெழுப்பவும் IMF, 274 மில்லியன் அமெரிக்க டொலர் களை கடனாக வழங்கியது. இந்நிகழ்ச்சித்திட்டம் 2002, ஜூன் மாதமளவில் பூர்த்திசெய்யப்படவேண்டியிருந்தும் இக்கால கட்டத்தில் சர்வதேச விமானநிலையம் எல்.ரீ.ரீ.ஈ. இனால் தாக்கப்பட்டமை ஒக்டோபர் 2001 இல் புதிய பாராளுமன்ற தேர்தலுக்கான நாள் குறிக்கப்பட்டமை போன்ற பொருளாதார மற்றும் அரசியல் அதிர்ச்சிகளின் காரணமாகச் சாத்தியப்படவில்லை. இதனால் IMF விதித்த மேலதிக ஏற்பாட்டு நிபந்தனைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட முடியவில்லை. இறுதியில் டிசம்பர் 2001 இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மீள்உடன்பாட்டுக்கு வந்ததுடன் நிகழ்ச்சித்திட்டமானது செப்டம்பர் 2002 இல் பூர்த்திசெய்யப்பட்டது.

### வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சிக்கான வசதி (PRGF) மற்றும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) - 2003

2003 இல் இலங்கையுடன் IMF மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இலங்கைக்கான IMF இன் 100 சதவீத அனுமதிப் பங்கிற்குச் சமமான 567 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இரு கடன் வசதிகளுக்கான உடன்பாடு எட்டப்பட்டது. இதில் 369 மில்லியன் அமெரிக்க டொலர் PRGF இன் கீழ் வழங்கப்பட்டதுடன் மிகுதி சென்மதி நிலுவை பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு நாடுகளுக்கு உதவும் EFF இன் கீழும் வழங்கப்பட்டது. இந்நிதியை இலங்கை மூன்று வருடக் காலப்பகுதியில் ஏழு கட்டங்களில் பெற்றுக் கொள்ள முடியும். இந்த உதவி "இலங்கையினை மீள் வெற்றியடைதல்: துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான இலக்கும் உபாயமும்" என அழைக்கப்படும் வறுமை குறைப்புத் தந்திரோபாயப் பத்திரத்தில் (PRSF) முன்வைக்கப்பட்டுள்ள அரசின் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டத்திற்கு துணைசெய்யும் நோக்கத்தினைக் கொண்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானமானது இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டமைப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கைகளை இவ்வுதவி மூலம் ஆதரிப்பதாகக் கொள்ளப்பட்டது. எனினும் இந்நிதியில் முதலாவது தவணை மட்டுமே பெற்றுக் கொள்ளப்பட்டது. வரிநிர்வாகம், மக்கள் வங்கியை மீளக்கட்டமைத்தல் முதலான முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களில் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் இக்கடன் பற்றிய முதலாவது மீளாய்வில் தாமதம் ஏற்பட்டது. வருடத்தின் இறுதிக் காலப்பகுதியில் பேரினப் பொருளாதார கொள்கைச் வரைச்சட்டகத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2004 இல் பேரினப் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்தன. இவ்வாறாக IMF இன் PRGF நிதியீட்டம் முழுமை பெறவில்லை.

### இயற்கைப் பேரனர்த்தத்திற்கான (சுனாமி) அவசரகால உதவி - 2005

2005 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி தாக்கம் காரணமாக உல்லாசப் பயணத்துறை பாதிக் கப்பட்டதோடு மீள்கட்டமைப்புக்காக இறக்குமதி செலவினம் அதிகரித்ததன் காரணமாக இலங்கையின் சென்மதி நிலுவை மீண்டும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. 2005 இல் ஏற்பட்ட பெற்றோலிய விலை ஏற்றம் மற்றும் வரட்சி காரணமாக சென்மதி நிலுவை மேலும் நலிவடைந்தது. இச்சூழ்நிலையில் வெளியக ஒதுக்குகள் மோசமாக குறைவடையாமல் உடனடி நிதியியல் தேவைகளை எதிர்கொள்ளும் இலங்கையின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் அரசாங்கமானது SDR 103.35 மில்லியனுக்கு (அனுமதிப்பங்கின் 25 சதவீதம்) சமமான தொகையை நிதியத்தின் அவசரகால உதவி கொள்கையின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனாகக் கேட்டது. PRGF உதவி பெறத் தகுதியான நாடுகளுக்கு இயற்கைப் பேரனர்த்த அவசரகால

உதவிவழங்குதல் தொடர்பான நிதியத்தின் கொள்கைகளுடன் இசைந்து செல்லும் வகையில் உடனடி சென்மதி நிலுவை நிதியிடலுக்காகவும் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்காகவும் சர்வதேச நாணய நிதியமானது 0.5 வீத வருடாந்த வட்டியின் அடிப்படையில் SDR 103.4 மில்லியனை வழங்கியது. அவசரகால நிதி உதவி தொடர்பில் நேரடியான பேரினப் பொருளாதார நிபந்தனைகள் இணைக்கப்பட்டிராத அதேவேளை இறை முகாமைத்துவ பொறுப்பாண்மைச் சட்டத்துடன் இசைந்து செல்லும் வகையில் IMF பணிப்பாளர்கள் நட்டத்தை ஏற்படுத்தும் அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைக்குமாறும் வரி நிர்வாகம் மற்றும் நிதிச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை முன்னெடுக்குமாறும் அரசாங்கத்தை ஊக்குவித்தனர்.

## 2. தற்போதைய கடன்வசதி : மேலதிக ஏற்பாடு - 2009

இலங்கையின் பொருளாதார அடிப்படைகள் உறுதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, 2007 யூலை உச்சத்திலிருந்த பணவீக்கத்தில் வீழ்ச்சி, ஏற்றுமதி அதிகரிப்பு, முதலீட்டு அதிகரிப்புடன் கூடியதான பண அனுப்பல்களின் உறுதியான வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்ததாக 2008 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை மேம்பட்டுக் கொண்டிருந்தது. இதனால் நாடு IMF அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்திலிருந்து உதவி தேவைப்படுவதாக உணரவில்லை. எனினும் 2008 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் உலக நிதி நெருக்கடியின் காரணமாக வெளிநாட்டுத் துறை மோசமாகப் பாதிக்கப்பட்டது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் மேற்கொள்ளப்பட்ட தமது முதலீடுகளை திடீரென மீட்டுக்கொள்ள வழிசமைத்தது. முன்னர் பெற்றோலியம் இறக்குமதிக்கு தாராளமாகக் கிடைத்த குறுங்கால கடன் வசதிகள் உடனடியாகக் கோரப்பட்டன. வெளிநாட்டு நிதியீட்டத்துடனான செயற்திட்டங்களின் அமுலாக்கத்துக்கு தேவையாக இருந்த வர்த்தக நிதி குறைவடைந்தது. அமெரிக்க டொலருக்கு எதிராக பிரதான சர்வதேச நாணயங்கள் கடுமையாகத் தேய்வடைந்ததன் காரணமாக பாரதூரமான பெறுமதி இழப்புகள் ஏற்பட்டன. 2008 ஜூலையில் 3.5 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த வெளிநாட்டு ஒதுக்குகள் 2009 பெப்ரவரியில் 1.2 பில்லியனாக வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பேரினப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பனவற்றிலிருந்து மீழும் நோக்குடன் 2009 மார்ச்சில் இலங்கையானது IMF இடம் SBA வசதியின் கீழ் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுக்கு விண்ணப்பித்தது. இது இலங்கைக்கான தற்போதைய அனுமதிப்பங்கில் 300 சதவீதமாகும்.

மேற்படி கடனுக்கான விருப்ப விண்ணப்பம் (Letter of Intent) 2009 ஜூலை 16 ஆம் திகதி இலங்கை அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்டதுடன் 2009 ஜூலை 24 ஆம் திகதி மேற்படி கடன் IMF நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. வெளிநாட்டு ஒதுக்கீடுகளை மேலும் மீள்கட்டியெழுப்புதல், இறை நிலைமையை வலுப்படுத்தல், உள்நாட்டு நிதி முறைமையை வலுப்படுத்துவதுடன் பணவியல் உறுதிப்பாட்டினைப் பேணுதல், பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களை வலுப்படுத்தல் ஆகியவையே இக்கடனைப் பெறுவதற்கான பிரதான குறிக்கோள்களாகும். இந்நிகழ்ச்சித்திட்டமானதுஇருபது மாதங்களுக்குள் தனது வெளிநாட்டு இருப்பை 3.5 மில்லியன் அமெரிக்க டொலராக அல்லது 3.5 மாத இறக்குமதி செலவினத்துக்குப் போதுமானதாக இலங்கை கட்டியெழுப்புவதற்கு உதவும்முகமாகவே வடிவமைக்கப்பட்டது.

இக்கடன் வசதி SDR 1.65 பில்லியனுக்கு சமமானது (சுமார் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள்). இது இலங்கைக்கான தற்போதைய கோட்டாவின் 400 வீதமாகும். அத்துடன் இதுவே IMF இலங்கைக்கு வழங்கிய மிகக்கூடிய கடன் வசதியாகும். இக்கடனின் முதலாவது தவணையான SDR 206.7 மில்லியன் (சுமார் 322 மில்லியன் அமெரிக்க டொலர்) உடனடியாக வழங்கப்பட்டது. மிகுதிக்கடன் ஏழு தவணைகளில் வழங்கப்படும். இறுதித் தவணை 2011 மார்ச்சில் வழங்கப்படும். எனினும் பொருளாதார செயலாற்றுகை தொடர்பான காலாண்டு மீளாய்வின் அடிப்படையிலே இக்கடன் தொடர்ச்சியாக வழங்கப்படும். மேற்படி கடனானது 2012 ஏப்பிரலில் தொடங்கி 4 வருடங்களில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். கடனுக்கான வட்டி இரு கூறுகளைக் கொண்டது. முதலாவது சேவைக்கான கட்டணம் இது SDR வீத அடிப்படையில் வாராந்தம் கணிக்கப்படும் (தற்போதைய வீதம் - வருடாந்தம் 0.3 சதவீதம்). அடுத்தது நிலையான வட்டி. இது கடன் மிகுதியின் மீது வருடாந்தம் ஒரு சதவீதம் அறவிடப்படும். மிகுதிக்கடன் நாட்டுக்குரிய அனுமதிப்பங்கினை விட 300 சதவீதம் மிகையாக இருக்குமெனில் இரண்டு சதவீதம் மேலதிக கட்டணம் அறவிடப்படும். மூன்று வருடத்துக்கு மேல் 300 சதவீத அனுமதிப்பங்கு மிகை காணப்படுமெனில் வருடாந்தம் மூன்று சதவீதம் மேலதிக கட்டணம் அறவிடப்படும். இரண்டாவது மீளாய்வு 2009 செப்டம்பர் நடுப்பகுதியில் இடம்பெற்றது.

மேற்படி SBA கடன் வசதியானது வரவு செலவு திட்ட பற்றாக்குறையை 2009 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7 வீதமாகவும், 2010 இல் 6 வீதமாகவும், 2011 இல் 5 வீதமாகவும் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தக்கூடியதாக பொருளாதாரத்தை உறுதிப்படுத்துதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை கவரக்கூடியதாக தனியார் துறையை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களையும் கொண்டுள்ளது. முதலீடுகளை உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் அத்துடன் மோதலுக்குப் பின்னரான மீள் கட்டமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் நிவாரணம் வழங்கல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தமுடியும். விருப்ப விண்ணப்பக் கடிதம் மற்றும் தொழில் நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் தன்விருப்புடனும் உள்நாட்டிலும் தெரிவு செய்யப்பட்டவையாகும்.

## 3. இலங்கைக்கு இக்கடன் வசதி மூலம் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் ஏற்படக்கூடிய சவால்களும்

### வாய்ப்புகள்

இலங்கை பொருளாதார ரீதியாக சவாலுடையதாக இருந்தபோதிலும் ஒரு சிறந்த காலகட்டத்தினுள் பிரவேசிக்க உள்ளது. வாய்ப்புக்களுள் பிரதானமானது யாதெனில் வெளிநாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்பவும் தேசத்தின் நிதி ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்தவும் இலங்கைக்கு IMF வழங்கும் கடன் வசதியாகும். வெளியிலிருந்து வரும் திணிப்புகள் கொள்கை சீர்திருத்தத்துக்கு வழியேற்படுத்தும் ஒரு செயற்றிறனான நெம்புகோல் ஆகும். அதேநேரத்தில் சவாலான சீர்திருத்தங்களை மேற்கொள்ள உள்நாட்டு அரசியல் விருப்பு அவசியமாகும். IMF உடன்படிக்கைகளுடனான இலங்கையின கடந்தகால அனுபவங்கள் வெளிப்படுத்துவது யாதெனில் சீர்திருத்தங்களை வழிப்படுத்துவதற்கு தனியே வெளிநாட்டு நிபந்தனைகள் மாத்திரம் போதுமானதல்ல.

மேற்படி கடன்வசதியானது பொதுத்துறை - மக்கள் பங்காண்மைகளை ஏற்படுத்தவும் அரச தொழின் முயற்சியாண்மைகளை மீள்கட்டமைக்கவும் வாய்ப்பளிக்கிறது. ஏற்கெனவே இத்தேவைகளுக்காக தந்திரோபாய தொழின்முயற்சி முகாமைத்துவ முகவரகம் (SEMA) மற்றும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு (PUC) அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் மிகச் சிறந்த அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு நட்டம் ஏற்படுத்துகின்ற அரச நிறுவனங்களான இலங்கை மின்சார சபை (CEB) ,லங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) முதலியவற்றை மீள்கட்டமைக்கக்கூடிய முன்னெப்போதும் இருந்திராத ஒரு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்த இரண்டு நிறுவனங்களையும் 2011 ஆம் ஆண்டளவில் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க உள்ளதாக கடன் விருப்பு விண்ணப்பத்தில் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. IMF கடன்வசதியானது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பவும் உதவும். அத்துடன் IMF உடன் அரசாங்கம் கொண்டுள்ள விளக்கத்தின் அடிப்படையில் நிதி ஒழுங்குக்கான ஓர் அர்ப்பணிப்பை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது. இது நீண்ட கால பேரின பொருளாதார உறுதிப்பாட்டுக்கு மிகவும் முக்கியமானது. பொருளாதாரத்தின் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கை காரணமாக இலங்கையைப் பற்றிய கணிப்பீடு மேம்பட்டுள்ளதுடன் முதலீட்டாளர்களின் ஈடுபாடும் அதிகரித்துள்ளது.

நிதித்துறையை மேம்படுத்த வேண்டிய தேவையானது நிதிச் செயற்பாடுகளின் இரட்டைத் தன்மையை கண்டறிவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். மத்திய அரசாங் கத்தின் செலவுகள், மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்படும் செலவுகள் ஆகியவற்றை ஆராயும் வாய்ப்புகள் ஏற்படும். இறை நிலுவைகளை மேம்படுத்துவதில அரசாங்க செலவு களைக் குறைத்தல் முக்கியமான படிமுறையாகக் காணப்படுகையில் குறிப்பாக 2009 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் வீழ்ச்சிப் போக்க அவதானிக்கப்பட்ட சூழ்நிலையில் வருமான மூலங்களும் நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டும். உதாரணமாக முதலீட்டு சபையின் (BOI) ஊக்குவிப்புத்

திட்டம் செலவு கூடிய ஊக்குவிப்புகளைக் குறைக்கும் நோக்குடன் மீளாய்வு செய்யப்பட வேண்டும். வருமான நிலைமையானது இதுவரை தவிர்க்கப்பட்ட வகுதிகள் மற்றும் முறைசாரா பொருளாதாரம் என்பவற்றை உள்வாங்கி வரி வலையமைப்பினை அகலமாக்குதல் மற்றும் பெறுமதி சேர் வரியை (VAT) சீர்திருத்தம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்தப்படலாம். மேற்படி கடன் வசதியானது நன்கொடை வழங்குவோர், கடன் வழங்குவோர் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோர் இலங்கை மீது கொண்டுள்ள நம்பிக்கையை மேம்படுத்தும். அத்துடன் இலங்கை சில வேறு வழிகளிலும் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வழிகளினூடாக SBA இல்லாமல் எதைப்பெற்றிருக்கலாமோ அதைவிட நாடு நிதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அரசாங்கமானது வடக்குக் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிரதான உட்கட்டமைப்புகளில் செயற்றிறனான வழிகளில் முதலீடு செய்ய முடியுமெனின் நாட்டின் நீண்டகால உற்பத்தி உள்ளார்ந்த ஆற்றல் மேம்படும். குறுங்காலத்தில் மோதலுக்குப் பின்னர் மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி காரணமாக உள்நாட்டுக் கேள்வி அதிகரிக்கும். இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் பொருளாதார தேக்கம் ஏற்பட்டுள்ள போதிலும் உள்நாட்டு உற்பத்தியில் விரிவாக்கமும் வளர்ச்சியும் ஏற்படும். மேற்படி கடன் வசதியை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் சர்வதேச ஒதுக்கில் உறுதியான திரட்சி, வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையில் படிப்படியான வீழ்ச்சி, உறுதியான பண வளர்ச்சியை நிலையாகப் பேணுதல் என்பன சாத்தியமாகும்.

## சவால்கள்

மேற்படி IMF கடன்வசதி தொடர்பான பிரதான சவால்களில் ஒன்று இறை இலக்குகளை அடைதல் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை தற்போதைய இது 7 வீத (2008) மட்டத்திலிருந்து 2010 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதமாகவும் 2011 இல் 5 வீதமாகக் குறைப்பதுமாகும். நிதி இலக்குகளை அடைவது என்பது தற்போதைய நிலையில் முக்கிய பிரச்சினை ஆகும். ஏனெனில் பாரிய அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்கள், பாரிய பாதுகாப்பு செலவீனம் மற்றும் அதிகரித்துச் செல்லும் பசளை மானியம் ஆகியவை காரணமாக மீண்டெழும் செலவும் மூலதனச் செலவும் அதிகரித்துச் செல்கின்றன. பாதுகாப்பு செலவினத்தைப் பொறுத்தவரையில் மூலதனச் செலவுகள் குறைவடையக்கூடும் ஆனால் மீண்டெழும் செலவுகள் தற்போதைய நிலையில் காணப்படும் அல்லது அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிதி முகாமைத்துவ பொறுப்பாண்மை சட்டம் மூலம் இந்த இலக்குத் தொடர்பான ஒரு வரைச்சட்டம் 2003 இல் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் 2004 சுனாமி பேரழிவு இதனை மாற்றி அமைத்ததுடன் இந்த நிலைமை இன்னும் தொடர்கிறது.

இலங்கை மின்சாரசபை மற்றும் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஆகிய வற்றை மீள்கட்டமைப்பதும் 2011 இறுதியில் அவற்றை இலாபம் பெறச் செய்வதும் இன்னுமொரு சவாலாகும். இது எவ்வாறு நடைபெறும் எவ்வளவு காலம் எடுக்கும் போன்ற கரிசனைகளும் உள்ளன. அது மட்டுமில்லாது மேற்படி இரு நிறுவனங்களையும் தவிர ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ், இலங்கை றெயில்வே, இலங்கைத் துறைமுக அதிகார சபை போன்ற நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களும் இருக்கவே செய்கின்றன.

வரி முறைமையை எளிமைப்படுத்தல், வரி அறவீட்டு அமுலாக்கத்தினை வலுப்படுத்தல், வரி கணக்காய்வை மேம்படுத்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளும் கவனத்திற் குரியவையாகும். வருமான மேம்பாட்டைப் பொறுத்தமட்டில் 3 வீத தேச நிர்மான வரியை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஏற்கெனவே ஒரு குறுங்கால வழிமுறையை அறிமுகம் செய்துள்ளது. இலங்கையின் வரி அமைப்பை மீளமைத்து ஒழுங்கமைக்க வேண்டியது அவசியமாகும். இலங்கையில் சுமார் 25 வரிகள் உள்ளன. ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 7-9 வரையான வரிகள் மட்டுமே உள்ளன. எனவே புதிய வரிவிதிப்பானது வரி வருமானத்தை அதிகரிக்கும் என்பதை விட தனியார் துறை முதலீட்டுக்கான ஊக்கத்தைக் குறைக்கும். எனவே இங்குள்ள சவால் என்னவெனில் வரி முறைமையை மேலும் சிக்கலாக்காமல் வரி வருமானத்தைக் கூட்டுவதும் தனியார் துறை முதலீட்டுக்கு ஊக்குவிப்புகளை வழங்குவதுமாகும். 2009 ஜூனில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி வரி விதிப்பு ஆணைக்குழு இந்த சவாலுக்கு முகம் கொடுப்பதில் கருத்தைச் செலுத்தி வருகிறது.

குறுங்கால வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல், நேரடி முதலீடு மற்றும் மீள்கட்டுமான செயற்றிட்டங்களுக்கான கொடையாளிகளின் நிதியீட்டம் என்பனவற்றின் பாய்ச்சல் அதிகரிக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாணயமாற்று வீதத்தை முகாமை செய்வது ஒரு சவாலான பணியாகக் கருதப்படுகின்றது. இலங்கை நாணய மதிப்பேற்றத்துக்கான அழுத்தங்களைக் கட்டுப்படுத்தியவாறு ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இலங்கையானது நெகிழ்ச்சியான செலாவணி வீதத்தை பேண வேண்டுமென எதிர்பார்க்கப்படினும் வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் ஏற்றுமதிப் போட்டித்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு நாணயமாற்று வீதத்தினைப் பேணுவது சவாலானதாகும்.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளமன்றத் தேர்தல்களும் அவை எவ்வாறு தேசிய செலவினத்தையும் ஒரு அறிவுபூர்வமான பொருளாதார கொள்கை வரைச்சட்டகத்தையும் பாதிக்கும் என்பது மற்றுமொரு சவாலாகும். தேர்தல் காலத்தில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமானது. அதே நேரத்தில் மக்களைக் கவரக்கூடிய கொள்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும் வாய்ப்புக்களும் உருவாகக்கூடும் என்பதுடன் இது மேலும் இறை உறுதியின்மையை ஏற்படுத்தக்கூடும்.

இலங்கை மேற்படி குறிக்கோள்களை அடைவது முக்கியமானது. அன்றேல் மிகுதி கடன் வசதி இடைநிறுத்தப்படுவது பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும். கடனில் முதலாவது தவணை 322 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே. மிகுதியாக உள்ள 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் மிகவும் முக்கியமானது. IMF ஏதாவது காரணங்களினால் மிகுதிக் கடனை இடைநிறுத்தினால் நாட்டின் கடனைத் திருப்பிச்செலுத்தும் தரவரிசை வீழ்ச்சி அடையும். இந்நிலையில் அதிக வட்டியுடனான வர்த்தக ரீதியான கடன் வாங்குதல் கூட சிரமமாகி விடும். எனவே எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்ட போதிலும் மக்கள் விரும்பாவிட்டாலும் கடன் குறிக்கோள்களை அடைவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 4. கொள்கை விதந்துரைகள்

- இறை ஒழுங்கினை மீள்கட்டமைப்பதற்காக வகைகூறல் மற்றும் சிறந்த பொருளாதார ஆட்சிச்செயன்முறை மீளவும் கட்டியெழுப்பப்படல். பிந்திய கணக்காய்வுடன் கூடிய கடன்தீர்வுத்திறன் மீதான வளரும் கரிசனையை உறுதிப்படுத்துவதும் மிகவும் முக்கியமானதாகும்.

- வரித் தளத்தினை விரிவுபடுத்தி ஒழுங்குபடுத்துதல் மற்றும் முறைசார் தனியார் / கம்பனி துறை மீது சகலவற்றையும் சுமத்தாமல் முறைசாரா தனியார் துறையை ஒன்றிணைக்க வேண்டும். முறை சார்ந்த துறை மொத்த தனியார் துறையில் 40 வீதமாகும். வரி சட்டங்களும் வரி நிர்வாகமும் பெருந்தொகையான மக்களிடமிருந்து கூடிய வரிகளை அறவிட வேண்டும். 5 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான கொள்வனவுகளுக்கும் வரிவிதிப்புக்கோவை இலக்கம் கட்டாயமாக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகளும் பொதுத்துறை ஊழியர்களும் வரிகட்டுவதில் உதாரணமாக செயற்பட வேண்டும்.

- அரசுக்கு சொந்தமான தொழின் முயற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு முதலீடு களில் பொதுத்துறை - மக்கள் பங்காண்மைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்தகைய கொள்கைகள் அரசாங்கத்தின் பொதுச் செலவினங்களைக் குறைத்து அரச நிதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தவதற்கு உதவியாக அமையும். இந்த வகையில் உடமையை கைவிடுவதைவிட அரசுடமை தொழில்முயற்சிகளின் முகாமைத்துவத்தினை தனியார்மயப்படுத்துவது அதிக செயற்றிறனானதாக இருக்கக்கூடும்.

- முதலீடுகளைக் கவரக்கூடிய வகையில் விலைகோரல் செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மை பின்பற்றப்பட வேண்டும்.

- சமுர்த்தி போன்ற நலனோம்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மானியம் வழங்குவதற் கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஏற்படக்கூடிய தவறுகள் தவிர்க்கப்பட வேண்டும். அரசாங்க செலவினங்களைக் குறைத்து பொருளாதார சமூக விளைவுகளை மேம்படுத்தக்கூடிய வகையில் இந்நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வுக் குட்படுத்தப்பட வேண்டும்.

- வர்த்தகம் செய்வதில் இலகுதன்மை, உலகளாவிய போட்டித்தன்மை, வரிவிதிப்பு முதலியவற்றில் இலங்கையின் தரவரிசையை மேம்படுத்துவதின் மூலம் அன்னிய நேரடி முதலீட்டை (FDI) அதிகரிக்க முடியும். எளிமைப்படுத்தல் அதிகாரத்துவத் தைக் குறைத்தல் ஊழலை அகற்றுதல் போன்றவை மூலம் உட்கட்டமைப்பில் அரசாங்கம் முதலீடு அதிகமில்லாமலேயே இலக்குகளை அடைய முடியும்.

- இலங்கையானது வட்டிவீதத்தை குறைக்க (ஓர் இலக்கம்) முயலவேண்டும். இதன் மூலம் அரசியல் பரவலாக்கத்தில் அவ்வளவு முன்னேற்றம் இல்லாவிட்டா லும் கூட வெளிநாட்டில் வதியும் இலங்கையரின் முதலீட்டைக் கவர முடியும்.

- போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி (குறிப்பாக பாதை, விமானப் போக்குவரத்து) மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி விளம்பரப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் தனியார் துறை முதலீடுகளை இப்பகுதிகளுக்கு கவரமுடியும். இங்கு உற்பத்தி மற்றும் சேவைத்துறை விரிவாக்கத்துக்கு உயர் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறாக சிறந்த வர்த்தகச் சூழ்நிலைக்கு எதிரான உளவியல் தாக்கங்கள் நீக்கப்பட வேண்டும்.

ஒரு சுயாதீனமான இலாப நோக்கற்ற ஆய்வு மற்றும் ஒத்துவாதாடல் நிறுவனமான பாத்பைன்டர் மன்றம் அழைப்பாளர்கள் மட்டும் சங்வாதத்தினை (கருத்தாடல்) இலங்கை அரசாங்கத்திற்கான சர்வதேச நாணய நிதியத்தின் 2009 கடன் வசதியின் காரணமாக உருவாகும் வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் பற்றி கருத்துரைப்பதற்காக நடத்தியது. ஒரு கட்டுக்கோப்பான ஆக்கபூர்வமான கருத்தாடலினை மேம்படுத்தும் நோக்கில் இக்கடன் வசதியின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக எடுத்துரைப்புக்களை முன்வைப்பதற்கு ஒரு நிபுணர் குழு கூட்டப்பட்டது இக்குழுவில் இடம்பெற்றிருந்த கலாநிதி. சுமன் கெலேகம சர்வதேச நாணய நிதியக் கடன் வசதி- சவால்கள், வாய்ப்பு மற்றும் இலங்கைக்கான கொள்கைத் தெரிவுகள் என்பது பற்றியும், கலாநிதி. அனுர எக்கநாயகே தனியார் துறையின் பார்வையில் என்னும் தலைப்பிலும், கலாநிதி உஸ்வத்த ஆராச்சி கடன்பற்றிய பரபரப்பு என்ன? என்பது பற்றியும் எடுத்துரைப்புக்களை முன்வைத்தனர். பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஸ்மன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

பாத்பைன்டர் வரித்தளத்தினை ஒழுங்குபடுத்தி விரிவாக்குவது, வணிகம் செய்வதற்கு இலகுவான நாடு எனும் ரீதியில் இலங்கையின் தரநிரலை மேம்படுத்துவது, உலகளாவிய போட்டித்தன்மை, வரி ஆட்சிக்காலப்பகுதி, நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மானியங்கள் ஒதுக்கும் போது நன்மையடைவோர் தெரிவினை இலக்கிடல் போன்ற சிபார்சுகளை அங்கீகரிக்கின்றது. இக்கொள்கைச் சிபார்சுகளின் அமுலாக்கமானது பேரினப் பொருளாதார உறுதி, பேண்தகு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பனவற்றுக்கு வழிவகுக்கும் என பாத்பைன்டர் நம்புகின்றது. இக்கொள்கை விளக்கத்தின் விரிவான பகுப்பாய்வினை எமது www.sanvada.org இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

மேற்படி கொள்கை விளக்கமானது IMF கடன் வசதிகள் - சவால்களும் வாய்ப்பு களும் என்னும் கருத்தாடலை அடிப்படையாகக் கொண்டது. இந்த கருத்தாடலில் கலாநிதி சமன் கெலேகம, கலாநிதி அனுர ஏக்கநாயக்க, கலாநிதி உஸ்வத்த ஆராச்சி மற்றும் பேராசிரியர் டபிள்யூ. டி. லஷ்மன் ஆகியோர் எடுத்துரைப்புகளை சமர்ப்பித்தனர்.

தொகுப்பு: செல்வி. தர்ஷனி பிரேமரட்ண, ஆய்வு உதவியாளர், இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவனம்.

'POLICY BRIEF 17'

பாத்பைண்டர் மன்றம் | தொலைபேசி: 2596281 | பெக்ஸ்: 2595894 | மின் அஞ்சல்: info@pathfinderfoundation.org
இணையத்தளம்: www.sanvada.org / www.pathfinderfoundation.org

ஆசிரியபீட உதவியாளர்: திருமதி.அமீரா கரீம் / திட்ட முகாமையாளர்